செய்தி வெளியீடு எண்: 022 நாள் : 14.01.2015

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி போர்க்கால அடிப்படையில் டெங்கு காய்ச்சலை ஒழித்திட நடவடிக்கை எடுத்திட மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைத் துறை அமைச்சர் வலியுறுத்தல்.**

*******

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (14.01.2015) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயல்பாடுகள் குறித்தும் போர்க்கால அடிப்படையில் டெங்கு காய்ச்சலை ஒழித்திட நடவடிக்கை எடுத்திடவும் சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

தமிழ்நாட்டிலுள்ள தென்மாவட்டங்களில் குறிப்பாக மதுரை, திருநெல்வேலி மண்டலங்கள் உள்ளடக்கிய மாவட்டங்களில் உள்ள மாநகராட்சி நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் தென்மேற்கு பருவமழை முடிவுற்ற பின்பு வீடுகள் மற்றும் வீடுகளுக்கு அருகாமையில் தேங்கி நிற்கும் மழைநீரில் உற்பத்தியாகும் கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் இருப்பதாக அறியப்பட்டவுடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரகவளர்ச்சி துறை தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் நோய் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது.

இது தொடர்பாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் நகராட்சி நிர்வாக துறையின் முதன்மை செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர், அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சிகளின் மண்டல இயக்குநர்கள், ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களுடன் ஆய்வு நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் நகராட்சி/மாநகராட்சிகளின் அனைத்து வார்டுகளிலும் சிறப்பு கவனம் செலுத்தி துப்புரவுப் பணிகள் உள்ளிட்ட பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசுக்களை கட்டுப்படுத்திட அனைத்து பகுதிகளிலும் கொசு ஒழிப்பு புகை மருந்துகளை அடித்தல் (Fogging) நீர்நிலைகளில் கொசுப்புழு உற்பத்தியினை தடுக்கும் (Anti larval Breeding) மருந்துகளை தெளித்தல், குப்பை மற்றும் கழிவுகளை எங்கும் தேங்காமல் உடனுக்குடன் அப்புறப்படுத்தல், எங்கும் தண்ணீர் தேங்காமல், கொசு உற்பத்திக்கு உகந்த சூழ்நிலை ஏற்படாமல் விரைவு நடவடிக்கை எடுத்தல், நகராட்சியால் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் குளோரின் அளவினை உரிய கால இடைவெளியில் சோதனை செய்தல் என தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரகவளர்ச்சி துறையால் போர்க்கால

அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

ஆய்வுக் கூட்டத்தில் சென்னை மாநகராட்சி ஆணையர், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி ஆணையர்கள், பேரூராட்சிகளின் இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை உயர் அதிகாரிகள் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளான கொசு ஒழித்தல், கொசுப்புழு அழித்தல் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரிவித்தனர்.

இப்பணியில் அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதியை சேர்ந்த முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து அவர்களது ஒத்துழைப்புடன் இப்பணியினை சிறப்பாக செய்ய அறிவுரை வழங்கப்பட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, டெங்கு காய்ச்சல் பாதிப்புகள் அறியப்பட்டுள்ள இடங்களில் மேற்படி நடவடிக்கைகள் தடையின்றி தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் தீவிரமாக நடைபெற ஏதுவாக சிறப்பு குழுக்கள் அமைத்து சுகாதார துறை அலுவலர்களுடன் இணைந்து தடுப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி பகுதிகளில் 3200 குழுக்கள் அமைக்கப்பட்டு 3520 பேர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இதே போல் 528

பேரூராட்சி பகுதிகளில் பொது சுகாதார பணியாளர்கள் 6154 பேரும் தினக்கூலி அடிப்படையில் 3279 பேரும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் 6153 பேரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் நகராட்சிப் பகுதிகளில் 4380 குழுக்கள் அமைக்கப்பட்டு 30,665 பேரும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவித்தனர்.

10.01.2015 முதல் 12.01.2015 வரை 3 நாட்கள் வேலை திட்டமாக கணக்கிட்டு நகராட்சியில் பணிபுரியும் அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் நகராட்சி எல்லைக்குட்பட்டுள்ள அனைத்து வார்டுகள், தெருக்கள், வீட்டு எண்ணிக்கை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு தனித்தனியாக துப்புரவுப் பணியாளர்கள் / துப்புரவுப் பணி மேற்பார்வையாளர், சுகாதார ஆய்வாளர்கள் / சுகாதார அலுவலர்கள் மற்றும் நகர்ப்புற செவிலியர்கள் ஆகியவர்களுக்கு பணிகள் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்து மேற்படி வீடுகளிலும் மற்றும் தெருக்களிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையான கொசுப்புழு வாழிடங்களை அழித்தல், அபேட் மருந்து தெளித்தல், புகைத் தெளிப்புப் பணிகள், குப்பைகளை அகற்றுதல், கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்தல் போன்ற டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கண்ட மூன்று நாட்களும் முழு வீச்சில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், தொடர்ந்து செய்திட அறிவுறுத்தப்பட்டது.

டெங்கு காய்ச்சல் ஒழிப்பு நடவடிக்கைகளில் சென்னை மாநகரட்சியில் 384 கைதெளிப்பான்களும் வாகனத்தில் பொருத்தப்பட்ட தெளிப்பான்கள் 42ம், நகராட்சிகளில் கொசு ஒழிப்பு கைத்தெளிப்பான்கள் 792–ம் மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) 348–ம் அதேபோல் வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசு தெளிப்பான்கள் நகராட்சிகளை பொருத்தமட்டில் 175 எண்ணிக்கையும் மாநகராட்சிகளை பொருத்தவரையில் 60 எண்ணிக்கையும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், 12524 ஊராட்சிப் பகுதிகளில் 1426 புகைத் தெளிப்பான்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், 4855 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், 77348 பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவதாகவும், குடியிருப்பு லார்வா உற்பத்தி தடுப்புநர்களாக நகராட்சி பகுதிகளுக்கு 3648 நபர்களும் மாநகராட்சிப் பகுதிகளுக்கு (சென்னை நீங்கலாக) 1763 நபர்களும் கூடுதலாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு முன்னெச்செரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக கடந்த ஆண்டுகளை காட்டிலும் தற்போது மிகக் குறைவான நபர்களே டெங்கு காய்ச்சலில் பாதிக்கப்பட்டிருந்தாலும், டெங்கு நோயினை முற்றிலும் ஒழித்திட இப்போர்க்கால நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

போகிப் பண்டிகையின்போது ஏற்படும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றி தூய்மையாக வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இவ்வாய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலர் திரு.க.பணீந்திர ரெட்டி இ.ஆ.ப., முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் சென்னை மாநகராட்சி திரு. விக்ரம் கபூர் இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.பி.சந்தர மோகன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர், திரு,என்.சந்தீப் இ,ஆ,ப., உட்பட அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்கள் தலைமைப் பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊரகவளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**